2018 மே 29] [பேரவைத் தலைவர்]

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10-35

2. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

71—

அலுவலகத்திற்குக் கட்டடம்

***3219—திரு. தா.மோ. அன்பரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், பரணிபுத்தூர் ஊராட்சியிலுள்ள மின்வாரிய பிரிவு அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மக்களின் வசதிக்காக பரணிபுத்தூர் ஊராட்சி மன்றக் கட்டடத்தில் இப்பொழுது மின்வாரிய பிரிவு அலுவலகம் இயங்கி வருகிறது. அங்கே மின் கட்டண வசூல் மையமும் இருக்கின்ற காரணத்தினால், புதிய கட்டடம் இப்போதைக்குத் தேவையில்லை என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கட்டடம் தேவையென்று சொன்னால், ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஒரு மயானப் புறம்போக்கைப் பார்த்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைத்து அந்த இடத்தை வாங்கிக் கொடுப்பார்களென்றால், புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் அடங்கிய பரணிபுத்தூர் மின்சார வாரிய அலுவலகம் பரணிபுத்தூர் ஊராட்சி மன்றத்திற்குச் சொந்தமான 600 சதுரடி கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தை பரணிபுத்தூர், ஐயப்பன்தாங்கல், கோவூர், மௌலிவாக்கம், பெரியபழனிச்சேரி, காட்டுப்பாக்கம், மாங்காடு ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இக்கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், இடவசதி போதிய அளவில் இல்லாத காரணத்தாலும், மழைக் காலங்களில் இந்த அலுவலகத்தைச் சுற்றி தண்ணீர் தேங்கி அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாலும், பரணிபுத்தூர் மின்சார வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடத்தை உடனடியாக கட்டித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி வளர்ந்து வருகின்ற பகுதி என்பதால் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். துணை மின் நிலையம் அமைக்கின்றபோது,*

2018 மே 29]

உதவிப் பொறியாளர் அலுவலகத்தையும் அங்கேயே கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரணிபுத்தூர் மின்சார வாரிய அலுவலகத்திற்கு தற்போது கோவூர், ஐயப்பன்தாங்கல், போரூர் இராமச்சந்திரா மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களிலுள்ள துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. பரணிபுத்தூர் மின்சார வாரிய அலுவலகத்தில் நுகர்வோர் எண்ணிக்கை 16,000-க்கும் அதிகமாக உள்ளதால், பரணிபுத்தூரில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. அதனால் பரணிபுத்தூர் ஊராட்சியில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் துணை மின் நிலையத்துடன் கூடிய மின்சார வாரிய அலுவலகத்தை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 50 ஆண்டுகள், 60 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மின் கம்பிகள் பழுதடைந்து திடீர் திடீரென்று அறுந்து விழுந்து, அந்தப் பகுதிகளிலே பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. அதனை துறை சார்ந்த அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, எங்கெங்கெல்லாம் பழைய மின் கம்பிகளாக இருக்கின்றனவோ, அவற்றை மாற்றி புதிய மின் கம்பிகளை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் மொத்தம் 16,500 மின் நுகர்வோர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடத்தில் அமைந்துள்ள முத்தமிழ் நகர் என்ற பகுதியில் ஓர் ஏக்கர் அளவுள்ள மயானப் புறம்போக்கு இருக்கிறது. வளர்ந்துவரும் பகுதி என்பதால் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அரசின் எண்ணமும்கூட. அந்த இடத்தை வகை மாற்றம்*

செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கையை மேற்கொண்டவுடன், உடனடியாக துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அப்பொழுது அங்கு ஓர் உதவிப் பொறியாளர் அலுவலகமும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் பழமையான மின் கம்பிகள் இருப்பதால் அடிக்கடி அறுந்துவிடுகின்றன, அதனால் மின் தடை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில், எத்தனை கிலோ மீட்டர் தூரத்திற்கு எவ்வளவு மின் கம்பிகளை மாற்றியிருக்கிறோம், எவ்வளவு மின் கம்பங்களை மாற்றியிருக்கிறோம், எவ்வளவு transformers மாற்றியிருக்கிறோம் என்ற முழு விவரத்தையும் நாளை மறுநாள் என்னுடைய மானியக் கோரிக்கையின்போது தெரிவிக்கிறேன். இதுகாறும் இல்லாத அளவுக்கு மின்சார வாரியத்தில் பெரிய சாதனைகள் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டைவிட இப்பொழுது Fuse Off Calls என்று சொல்லக்கூடிய 1912 என்ற எண்ணுக்கு வரக்கூடிய complaint calls-ன் அளவு 6 சதவிகிதம் குறைந்திருக்கிறது என்று சொன்னால், எந்த அளவுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு மின்சார வாரியத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் உணர முடியும்.

முற்பகல் 10-40

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கோவூர் பகுதியில் கடந்த ஒரு வார காலத்திற்கு முன்பாக உள்ளாட்சித் துறையின் வாயிலாக metro water pipe-ஐ பதிக்கின்றபோது கேபிள் பாதிக்கப்பட்டுவிட்டது. அதை ஒரு முறை நாங்கள் சரி செய்தபோதும், வேறு ஒரு துறையின் சார்பாகப் பணி நடைபெற்றபோது மறுபடியும் பாதிக்கப்பட்டுவிட்டது. அப்படிப் பாதிக்கப்பட்ட காரணத்தால்தான் மின்தடை போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டன. அங்கு உடனடியாக overhead line ஒன்றைக் கொண்டு வரலாம் என்று இருக்கின்றோம். அப்போது முழுமையாக அந்தப் பகுதியிலே மின்வெட்டு இன்றி, மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல புதிய மின் கம்பிகள் மாற்றித் தருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 மே 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* **S.** *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தனது துறையைச் சார்ந்த கேள்விகளுக்கு* finger tip-*ல் பதில் வைத்திருப்பவர். தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் ஒரு தகவலைப் பெறுவதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன். இப்போது கோடைக்காலம். நீர் மின் நிலையங்களை நம்பி பிரயோஜனம் இல்லை. காரணம் இந்தக் காலகட்டத்திலே அதிகமான மின் உற்பத்தியை நீர் மின் நிலையங்களிலிருந்து நாம் எதிர்பார்க்க முடியாது. இதுபோன்ற காலங்களிலே நாம் நம்பி இருப்பது அனல் மின் நிலையங்களையும், கற்றாலைகளையும்தான் காற்றடித்தால்தான் காற்றாலைகள் மூலமாக மின்சாரம் தயாரிக்க முடியும். எனவே, அனல் மின் நிலையத்தை முழுக்க முழுக்க கோடைக் காலத்திலே நாம் நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது பத்திரிகைகளிலே சமீப காலத்திலே ஒரு செய்தி வந்தது. அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி கையிருப்பு இல்லையென்றும், 4 நாட்களுக்குத்தான் கையிருப்பு இருக்கிறது என்கின்ற தகவல் வந்தது. இதுகுறித்து நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து வந்திருப்பதாக செய்தி வந்தது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புவது, மின்சார உற்பத்திக்காக நம்முடைய அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை தட்டுப்பாடில்லாமல் கொண்டு வருவதற்கும், தட்டுப்பாட்டைப் போக்குவதற்கும் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறதா? தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு அரசு தயார் நிலையிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

நிலக்கரியை இரயில்வே மூலமாகக் கொண்டு வருவதற்கு சரக்குக் கட்டணம்-freight charges *ஆண்டுதோறும் அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. அந்தச் சரக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பதுதான் நம் அரசினுடைய கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே, மத்திய அரசு, குறிப்பாக இரயில்வே துறை, அந்தச் சரக்குக் கட்டணத்தைக் குறைப்பதற்கு முன்வந்திருக்கிறதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

[2018 மே 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு இந்தியா முழுவதும் கோடைக்காலம் என்ற காரணத்தால், அனல் மின் நிலையங்கள் முழு உற்பத்தியை செய்து கொண்டிருக்கின்ற காரணத்தால், அனைத்து அனல் மின் நிலையங்களுக்கும் போதிய நிலக்கரியை மத்திய அரசு அனுப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள், இறக்குமதி செய்கின்ற நிலக்கரியை தமிழ்நாட்டில் வாங்க வேண்டாம் என்று முடிவெடுத்து, உள்நாட்டிலேயே நாம் நிலக்கரியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கொள்கை முடிவெடுத்த காரணத்தினால், முழுக்க முழுக்க இந்திய அரசினால் வழங்கப்படுகின்ற நிலக்கரியைத்தான் நாம் பயன்படுத்தி வருகின்றோம். இப்போது கோடைக்காலம் என்ற காரணத்தினால் இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மின் நிலையங்களும் முழு மின் உற்பத்தியைச் செய்கின்ற காரணத்தினால் நிலக்கரியின் தேவை அதிகமாக இருக்கிறது.

பொதுவாக அனல் மின் நிலையங்களில் 15 நாட்களுக்குத் தேவையான நிலக்கரியை நாம் கையிருப்பில் வைத்திருப்போம். ஆனால், இந்தச் சூழ்நிலையில் நிலக்கரிக்கு எல்லாப் பகுதிகளிலும் தேவை இருக்கின்ற காரணத்தினால் நிலக்கரி இருப்பு குறைந்திருக்கிறது. அதனால் மத்திய அரசு நிலக்கரியை ஓரளவுக்கு நீங்கள் இறக்குமதி செய்துகொள்ளுங்கள் என்று சொல்லி, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக 20 இலட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்காக நாம் ஒப்பந்தம் செய்து, இப்போது நிலக்கரி வந்து கொண்டிருக்கின்றது. அதுவும் போதாத காரணத்தினால்தான், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு இரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கும் பல கடிதங்கள் எழுதியும்கூட ஒரு சில rakes மட்டுமே அதிகமாக வந்த காரணத்தினால், தேவை அதிகமாக இருக்கின்றது என்பதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ‘உடனடியாக நீங்கள் டெல்லி சென்று மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து அதைக் கேட்டு வாங்கி வாருங்கள்’ என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே டெல்லி சென்று மத்திய இரயில்வே அமைச்சர் அவர்களைப் பார்த்த பிறகு, கடந்த 4 நாட்களாக நாங்கள் கேட்ட அளவை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 2 நாட்கள், 3 நாட்கள்

2018 மே 29]

என்று இருந்த நிலக்கரி கையிருப்பு இப்போது 5 நாட்களாக உயர்ந்திருக்கிறது. எதிர்காலத்தில் எவ்வளவு நிலக்கரி தேவையோ, அவற்றைக் கையிருப்பில் வைக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 10-45

நிலக்கரி கையிருப்பு குறைவாக இருக்கிறது; அதனால் மின்சார வெட்டு வந்துவிடுமோ என்ற பயம் இல்லாத அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆணையிட்டு, எந்த அளவுக்கு நிலக்கரி கையிருப்பு இருக்கிறது என்பதையெல்லாம் அடிக்கடி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது கோடைக்காலம் முடிந்து, கிட்டத்தட்ட காற்றாலைகள் மின் உற்பத்தியைத் துவங்க இருக்கின்ற காரணத்தினால், வருகின்ற நிலக்கரியை இரண்டொரு அனல் மின் நிலையங்களில் அப்படியே கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கான ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். ஆக, எதிர்காலத்தில் அனல் மின் நிலையங்களின் முழு கொள்ளளவை எட்டுகின்ற அளவுக்குத் தேவையான நிலக்கரி கையிருப்பில் இருக்கும். மத்திய அரசும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாக தமிழகத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பேரூராட்சியாகத் தரம் உயர்த்துதல்

***10403—திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சிவந்திபுரம் ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?